ஓய்வூதியச் சுற்றறிக்கை இல : 01/2009 (திருத்தம் II)

எனது இல : ஓய்/சுற்றறிக்கை/2023.
ஓய்வூதியத் திணைக்களம்,
மாளிகாவத்தை,
கொழும்பு 10.
2023.12.01

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
மாவட்டச் செயலாளர்கள் / முப்படைத் தளபதிகள் மற்றும்,
பிரதேச செயலாளர்கள்.

**ஊனமுற்றோர் மற்றும் அனாதைகளுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவு**

ஊனமுற்ற மற்றும் அனாதைகளுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுச் செயல்முறையை மிகவும் வினைத்திறனுடன் செயல்படுத்துவதற்காகவும் இறந்த ஓய்வூதியர்களின் ஊனமுற்ற குழந்தைகளுக்கு ஓய்வூதிய பலன்களை வழங்கும் நோக்குடனும் என்னால் வெளியிடப்பட்ட 01/2009 ஆம் இலக்க 2009.01.07 ஆம் திகதிய ஓய்வூதியச் சுற்றறிக்கை மற்றும் 01/2009 (திருத்தம் I) ஆம் இலக்க 2020.12.02 ஆம் திகதிய ஓய்வூதியச் சுற்றறிக்கை ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு மேலதிகமாக இந்த அறிவுறுத்தல்கள் இதன் மூலம் வழங்கப்படுகின்றன.

02. ஊனமுற்ற மற்றும் அனாதைகளுக்கான ஓய்வூதியம் வழங்குவதற்கான விண்ணப்பங்கள் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படும்போது, ஊனமுற்ற மற்றும் அனாதைகளுக்கான ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டிய குழந்தைகளுக்கு மருத்துவ சபையிடமிருந்தான பரிந்துரைகளைப் பெறுவதுடன் அம் மருத்துவ அறிக்கையை உரிய ஆவணங்களுடன் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

03. ஊனமுற்ற குழந்தைகளை மருத்துவ சபைக்கு அனுப்புவதற்கான விண்ணப்பம் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் இணக்கத்துடன் தற்போது திருத்தப்பட்டுள்ளது. ஊனமுற்ற குழந்தைகளை மருத்துவ சபைக்கு அனுப்பும் போது இணைப்பு 01 அடங்கலாக புதிய படிவத்திற்கமைய விண்ணப்பத்தை சமர்ப்பிக்குமாறு இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

04. விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் போது, இணைப்பு 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

ஒப்பம்
ஏ. ஜகத் டி. டயஸ்
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்

பிரதிகள்:

1. ஜனாதிபதியின் செயலாளர் – த.த.த.
2. பிரதமரின் செயலாளர் – த.த.த.
3. செயலாளர், நிதியமைச்சு – த.த.த.
4. செயலாளர், பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு – த.த.த.
5. கணக்காய்வாளர் நாயகம் – த.த.த.

குறிப்பு இல. ………….. திகதி ……………

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்,

சுகாதார சேவைகள் திணைக்களம்,

சுவசிரிபாய,

கொழும்பு 10.

**நிரந்தரமாக ஊனமுற்ற அனாதைக்கு வாழ்நாள் முழுவதும் ஓய்வூதியம் வழங்குவதற்காக ஒரு மருத்துவ பரிசோதனைக்கு முன்னிறுத்தல்**

விதவைகள் மற்றும் ஆனாதைகள் ஓய்வூதியத் திட்டத்தில் பங்களிப்பவரான, திரு/திருமதி. ……………………………. இன் குழந்தையாகிய, திரு/திருமதி/செல்வி ……………………………, ஊனமுற்றோர் ஆனாதைகள் ஓய்வூதியம் பெற விண்ணப்பித்துள்ளார். எனவே அவர் நிரந்தர ஊனமுற்ற நபரா என்பதை தெரிந்துகொள்ள அவரை மருத்துவ குழுவினால் நடத்தப்படும் பரிசோதனைக்கு முன்னிறுத்த ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

1. ஊனமுற்ற அனாதை ஓய்வூதியத்திற்கான விண்ணப்பதாரியின் விவரங்கள்: -
   I. விண்ணப்பதாரியின் பெயர் :- ……………………………………………………
   II. தேசிய அடையாள அட்டையின் இல. :- ……………………………………………………
   (விண்ணப்பதாரியிடம் தே.அ.அ இல்லாத பட்சத்தில் பிரதேச செயலாளர் அல்லது பதவி நிலை அலுவலரால் சான்றளிக்கப்பட்ட புகைப்படம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.)
   III. வயது :- ……………………………………………………
   IV பால் :- ……………………………………………………
   V. முகவரி :- ……………………………………………………
   VI. தொடர்பு இல. :- ……………………………………………………
   VII.'சுகாதாரம் 307' மருத்துவச் சான்றிதழின்படி இயலாமையின் தன்மை :- ……………………………………………………………………………………
2. ஊனத்தின் தன்மை தொடர்பில் மாவட்ட மருத்துவ அலுவலரால் வழங்கப்பட்ட சான்றிதழ் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.
3. மருத்துவ பரிசோதனைக்கான திகதியை ஊனமுற்றவருக்கு நேரடியாக தெரிவிக்கவும். அதன் ஒரு பிரதியை எனக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கவும்.
4. நிரந்தர இயலாமையின் திகதி அல்லது காலத்தைக் குறிப்பிடவும்.
5. மருத்துவ அறிக்கையில் கையொப்பமிடும்போது, திகதி மற்றும் இடத்தைக் குறிப்பிட்டு மருத்துவமனை பணிப்பாளரின் பெயரைக் கொண்ட அதிகாரப்பூர்வ முத்திரையை இடுவது தொடர்பிலும் தயவுசெய்து கவனம் செலுத்தவும்.

……………………………………………………

பிரதேச செயலாளர்/ பதவிநிலை உத்தியோகத்தரின் கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை

பிரதி :- ……………………………………

(ஊனமுற்றவர் அல்லது பாதுகாவலர்)

வைத்திய அத்தியட்சகரால் பரிந்துரைக்கப்பட்ட திகதியில் மருத்துவ பரிசோதனைக்கு வருகைதர வேண்டும். மருத்துவ சபையின் முடிவு வழங்கப்பட்டவுடன் அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவு செய்து கவனத்தில்கொள்க.

மருத்துவ பரிசோதனை தாமதமானால், சுகாதார சேவைகள் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**அரச சேவையில் பணியாற்றும் அதிலுவலர்கள்/ ஊழியர்களின் ஊனமுற்ற அனாதைகளை மருத்துவ பரிசோதனைக்கு முன்னிறுத்தல்**

1. பொது சேவையில் நிரந்தர மற்றும் ஓய்வூதிய உரித்துடைய பதவியை வகிக்கும் அரச ஊழியர் ஒருவரின் ஊனமுற்ற குழந்தைகளுக்கு ஊனமுற்ற அனாதை ஓய்வூதியம் வழங்கும் நோக்கத்திற்காக பிரயோகிக்கப்படும் சட்டப் பின்னணி பின்வருமாறு.

   1.1. 1981 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க விதவைகள் மற்றும் அனாதைகள் சட்டத்தின் 29 ஆம் பிரிவு.

   1.2. 1983 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் சட்டத்தின் 13 ஆம் பிரிவு.

   1.3. 1719/3ஆம் இலக்க, 2011 ஆகஸ்ட் 15 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி.

2. சட்டத்திலிருந்தான பிரித்தெடுப்பு

பிரிவு 29 மற்றும் 13 - நிரந்தரமாக ஊனமுற்ற குழந்தைகளுக்கு வாழ்நாள் முழுமைக்கும் ஓய்வூதியம் வழங்குதல்

'ஒரு அனாதை உடல் அல்லது மன ஊனத்தால் அவர் தனது வாழ்வாதாரத்தை ஈட்ட முடியாதவராக ஆகியுள்ளார் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளரால் நியமிக்கப்பட்ட மூன்று மருத்துவ அலுவலர்களை உள்ளடக்கிய மருத்துவ சபையால் தீர்மானிக்குமிடத்து, அத்தகைய அனாதை, வயது வித்தியாசமின்றி, இந்த கட்டளைச்சட்டத்தின் கீழ் தனது வாழ்க்கைக் காலம் முழுமைக்கும் ஓய்வூதியம் பெற தகுதியுடையவர் ஆகிறார்'.

3. மருத்துவ சபையின் அறிக்கையை வழங்கும் போது கருத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்:-

அரச அலுவலர் மற்றும் வாழ்க்கைத் துணையின் மறைவுக்குப் பின்னர் அனாதைகளுக்கு (வேலையற்றவர்கள்) 26 வயது வரை அனாதை ஓய்வூதியம் பெற சட்டப்பூர்வமாக உரிமையுண்டு, மேலும் நிரந்தர ஊனத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கும் ஓர் ஊனமுற்ற அனாதை ஓய்வூதியம் பெற உரிமை உண்டு. ஆகவே, 26 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளும் பல்வேறு நோய்கள் மற்றும் குறைபாடுகளை முன்வைத்து ஊனமுற்றோர் ஓய்வூதியத்தைப் பெறுவதற்கான முயற்சிகளில் ஈடுபடும் போக்கு சமீபத்தில் அதிகரித்து வருகிறது. இத்தகைய சூழ்நிலைகளில், சில நாட்பட்ட நோய்களுக்கும் நிரந்தர குறைபாடுகளுக்கும் இடையே உள்ள வேறுபாட்டைக் கண்டறிவதற்கு பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம் ஆகும்.

3.1. தொடர்புடைய நபரின் அடையாளத்தை உறுதிப்படுத்துதல்.

3.2. அனைத்து தொடர் மருத்துவ நோயியல் (கிளினிக்) அறிக்கைகளிலும் குறிப்பிடப்பட்டுள்ள நாள்பட்ட நோய்களிலிருந்து நிரந்தர குறைபாடுகளை தெளிவாகக் இனங்காணல்.

3.3. உங்கள் பரிந்துரையை வழங்கும்போது, பின்வருவனவற்றில் கவனம் செலுத்தப்பட வேண்டும்:

3.3.1. ஊனமுற்ற நபர்களை நோயாளிகளிடம் இருந்து தனியாக கண்டறிந்த பின்னர் நிரந்தர ஊனமுற்ற நபருக்கு மட்டுமே பரிந்துரைகளை வழங்குதல்

3.3.2. ஒரு நபர் பிறப்பாலோ அல்லது பரிந்துரைக்கப்பட்ட அனாதையின் வயதைத் தாண்டிச் செல்வதற்கு முன்னரோ உடல் அல்லது மன ஊனத்தால் பாதிக்கப்பட்டால் பரிந்துரைகளை வழங்குதல்.

3.4. இயலாமை நிரந்தரமாக இல்லாமல் தற்காலிகமாக இருந்தால், மருத்துவக் குழுவின் பரிந்துரையில் அது தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

3.5. பெற்றோர்கள் இறந்த பிறகு ஊனமுற்றோர் ஓய்வூதியம் பெற வேண்டும் என்ற உள்நோக்கத்தில் குறித்த இயலாமை என்பது உண்மையான நிலையையா அல்லது போலியான நிலையையா காட்டுகிறது என்பதை தெளிவுபடுத்துவதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். எனவே, நாள்பட்ட நோய்களிலிருந்து நிரந்தர ஊனத்தை பிரித்து அடையாளம் காண்டு கொள்ள தொடர் மருத்துவ நோயியல் (கிளினிக்) வரலாற்றுடன் தொடர்புடைய அனைத்து தரவுகளை கருத்தில் கொள்ள வேண்டும்.

3.6. மருத்துவ சிகிச்சை மூலம் குணப்படுத்தக்கூடிய, எவையேனும் நாட்பட்ட ஒரு நோய் நிலை இருந்தால், சிகிச்சைகள் தேவைப்படும் காலத்தை அறிக்கையில் சுட்டிக்காட்டி, நோயாளியை மருத்துவ சிகிச்சைக்கு அனுப்ப வேண்டும்.

3.7. முதுமையின் விளைவாக ஏற்படும் பொதுவான குறைபாடுகள் மேலே உள்ள 3.6 இல் வகைப்படுத்தப்பட வேண்டும்.

3.8. அந்த நபர் திருமணமாகி குழந்தைகளைப் பெற்றிருந்தால், அந்த நபர் நிரந்தர ஊனத்தால் மேலும் பாதிக்கப்படுகிறாரா என்பதைச் சரிபார்ப்பதில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

**ஊனமுற்ற ஒய்வூதிய விண்ணப்பதாரர்களின் விபரங்கள்**

| | | |
|---|---|---|
| I. | விண்ணப்பதாரியின் பெயர் | :- ........................................................................ |
| II. | தே.அ.அ இல. | :- ................................................... |
| III. | வயது | :- ................................................... |
| IV. | பால் | :- ................................................... |
| V. | முகவரி | :- ................................................... |

VI. 'சுகாதாரம் 307' மருத்துவச் சான்றிதழின்படி இயலாமையின் தன்மை:-

.........................................................................................................

---

மருத்துவ சபை நியமனம்

எனது இல.:...........................................................

சேரல் .........................................................................................................

......./......./20.......

மேலே குறிப்பிட்ட நபரின் உடல்நிலையை பரிசோதிப்பதற்கும், அவரது வாழ்வாதாரத்தை ஈட்ட முடியாத அளவிற்கு அவர் உடல் அல்லது மன ஊனத்தால் பாதிக்கப்பட்டுள்ளாரா என்பதை தெரிவிப்பதற்குமாக நியமிக்கப்பட்ட மருத்துவ குழுவின் தவிசாளர் /உறுப்பினராக நீங்கள் இதன் மூலம் நியமிக்கப்பட்டுள்ளீர்கள்.

எனவே, பின்வரும் உறுப்பினர்களுடன் கூட்டங்களை நடத்தி, மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டவர் உடல் அல்லது மன ஊனத்தால் பாதிக்கப்பட்டுள்ளாரா என்பதை ஆராய்ந்து, அவர் வாழ்வாதாரத்தை ஈட்ட முடியாதவராக உள்ளார் என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

**பி.கு :- நாட்பட்ட நோய்களால் பாதிக்கப்படாத ஆனால் நிரந்தர ஊனமுற்றவர்களுக்கு மட்டுமே இந்த உரிமை உண்டு என்பதால், இது தொடர்பாக புகார் அளிக்கும்போது வழக்குகள் குறித்து முழுமையான கவனம் செலுத்தப்பட வேண்டும்.**

**சபை உறுப்பினர்கள்**

| முதல் எழுத்துகளுடன் பெயர் | பதவி |
|---|---|
| 1. ........................................................ | ........................ |
| 2. ........................................................ | ........................ |
| 3. ........................................................ | ........................ |

.........................................

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்

## மருத்துவ சபை அறிக்கை

பகுதி I

01. நோயாளியின் பெயர் :- ................................................................................

02. வயது :- .............................................

03. பால் :- பெண் ☐ ஆண் ☐

04. தே.அ.அ இல.:- ...........................................................

05. வி.அ.ஓ திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட உறுப்பினரின் பெயர்:- ..............

06. வி.அ.ஓ இல. :- .......................................................

பகுதி II

01. நோய் / குறைபாட்டைக் கண்டறிதல் :- ......................................................................

.........................................................................................................................

02. நோய் / குறைபாட்டின் சுருக்கமான வரலாறு :- ..................................................

03. நோய்க்கான காரணம் :- ..........................................................................................

04. நோயின் நிலை / சிக்கல்கள் (நிலைமையை விவரிக்கவும்) :- ..................................

.........................................................................................................................

05. இது மரபணு ரீதியாக தீர்மானிக்கப்பட்ட நோயா? ஆம் ☐ இல்லை ☐

பதில் 'ஆம்' என்றால், 06 ஆம் கேள்வியுடன் முடிக்கவும்.

பதில் 'இல்லை' என்றால், 07 ஆம் கேள்விக்குச் செல்லவும்.

06. நோய் மரபணு ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட வகையின் கீழ் இருந்தால், மருத்துவ கண்ணோட்டத்தில் தற்போது அறிகுறிகளைக் காண முடியுமா என்பதைக் குறிப்பிடவும்.

ஆம் ☐ இல்லை ☐

6.1 இந்த சர்தர்ப்பத்தில் அறிகுறிகளைக் அவதானிக்க முடியாவிட்டால், எத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு அந்த நபரை மருத்துவ சபைக்கு அழைக்க வேண்டும்?

............................. ஆண்டுகளின் பின்.

07. இது மரபணு ரீதியாக தீர்மானிக்கப்பட்ட நோயாக இல்லாவிட்டால், பாதிக்கப்பட்ட நபரின் வயதைக் குறிக்கவும்

வயது :- ............................ வருடங்கள்

08. நோய்த்தொற்றின் வயதைக் தீர்மானிக்க முடியாவிட்டால், பொருந்தக்கூடியவாறு பின்வருவனவற்றை நிரப்பவும்

26 வயதுக்குள் அல்லது அதற்கு முன் ☐ 26 வயதுக்குப் பிறகு ☐

09. இது குணப்படுத்தக்கூடிய நோயா ? ...............................................................................................

☐ இல்லை.

☐ மருத்துவ சிகிச்சை மூலம் குணப்படுத்த முடியும்.

குணப்படுத்த முடியாவிட்டால், 10 ஆம் கேள்விக்கு பதிலளிக்கவும்.

மருத்துவ சிகிச்சை மூலம் குணப்படுத்த முடியும் என்றால், 11 ஆம் கேள்விக்கு பதிலளிக்கவும்.

10. இது குணப்படுத்த முடியாத நோயாக இருந்தால் / குறைபாடாக இருந்தால், அவதானிக்கப்பட்ட பலவீனம் என்ன?

10.1 உடல் பலவீனம்: மொத்த இயக்க செயல்பாடுகள் ☐ சிறு இயக்கவியல் செயல்பாடுகள் ☐

10.2 பார்வை ☐

10.3 கேட்டல் ☐

10.4 பேச்சு ☐

10.5 புலனுணர்வு செயல்பாடு ☐

11. மருத்துவ சிகிச்சைகள் மூலம் நோய்/ குறைபாடு குணப்படுத்த முடியும் என்றால்,

11.1 நோயாளிக்கு இப்போது மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுகிறதா? ஆம் ☐ இல்லை ☐
(பதில் 'இல்லை' என்றால், சிகிச்சைக்காக நோயாளியை பொருத்தமான தொடர் மருத்துவ நோயியல் சிகிச்சைக்கு (கிளினிக்கிற்கு) முன்னிறுத்தவும்.)

11.2 நோயாளி தற்போது ஊனத்தால் அவதிப்படுகிறாரா, அவர் மருத்துவ சிகிச்சையில் இருந்தாலும், அவரது வாழ்வாதாரத்தை ஈட்ட முடியாதவராக உள்ளாரா.

ஆம் ☐ இல்லை ☐

11.3 பதில் ஆம் எனில், ஊனத்தால் தடைப்பட்ட செயல்பாடுகளைக் குறிப்பிடவும்

11.3.1 உடல் உள மொத்த இயக்க செயல்பாடுகள் ☐ சிறு இயக்கச் செயல்பாடுகள் ☐

11.3.2 பார்வை ☐

11.3.3 கேட்டல் ☐

11.3.4 பேச்சு ☐

11.3.5 புலனுணர்வு செயல்பாடு ☐

11.4 இந்த ஊனம் இன்னும் எவ்வளவு காலம் இருக்கும்? ........................................ ஆண்டுகள்

(மருத்துவ அலுவலர், நோயாளிக்கு ஓய்வூதியத்தைப் பரிந்துரைத்தால், அவரது ஓய்வூதியத்திற்கான தகுதியைப் மீண்டும் பரிசீலிப்பதற்காக ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர் நோயியலில் படிப்படியாக ஏற்படும் மாற்றத்தை அவதானிக்கும் நோக்கில் மீண்டும் மருத்துவ சபைக்கு அனுப்பப்பட வேண்டும்)

பகுதி III

மருத்துவ சபையின் இறுதி முடிவு

மேற்கூறிய அனைத்து உண்மைகளையும் கருத்தில் கொண்டு, நோயாளி தனது வாழ்வாதாரத்தை சம்பாதிக்க முடியாதவராக உடல் மற்றும் மன ஊனத்தால் பாதிக்கப்பட்டுள்ளார் என்பது உறுதிப்படுத்தப்படுகிறது / உறுதிப்படுத்தப்படவில்லை. எனவே, ஊனமுற்ற அனாதைகளின் ஒய்வூதியம் நோயாளிக்கு வாழ்நாள் முழுவதும் / ............................ ஆண்டுவரை பரிந்துரைக்கப்படுகிறது / பரிந்துரைக்கப்படவில்லை. நோயாளி ............................ ஆண்டுகளுக்குப் பிறகு மருத்துவ சபைக்கு மீண்டும் அனுப்பப்பட வேண்டும் / வேண்டியதில்லை.

திரு/திருமதி/செல்வி .................................................. எனும் பெயருடையவர் ................ அன்று ............................ மருத்துவமனையில் உள்ள மருத்துவக் குழுவிற்கு முன்னிறுத்தப்பட்டார் என்றும். மருத்துவ சபை பின்வரும் மருத்துவ ஆலோசகர்களைக் கொண்டிருந்தது என்றும் இதன் மூலம் சான்றளிக்கப்படுகிறது.

| மருத்துவ ஆலோசகரின் பெயர் | கையொப்பம் |
|---|---|
| 01. ................................................... | .............................. |
| 02. ................................................... | .............................. |
| 03. ................................................... | .............................. |

பகுதி IV

**மருத்துவ சபையின் முடிவு அங்கீகரிக்கப்படுகிறது / அங்கீகரிக்கப்படவில்லை.**

............................ ..................................................

திகதி பணிப்பாளர் /வைத்திய அத்தியட்சகர்

............................ ..................................................

திகதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்

இணைப்பு 02

**01/2009 (திருத்தம் II) ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கையின் படி, ஊனமுற்ற அனாதைகளின் ஓய்வூதியத்திற்கான விண்ணப்பதாரிகளை மருத்துவ சபைக்கு முன்னிறுத்தும்போதும் தொடர்புடைய கோவைகளை அனுப்பும்போதும் பின்பற்ற வேண்டிய செயல்முறை தொடர்பான அறிவுறுத்தல்களின் தொகுப்பு.**

(அ)

i. தற்போது அரச சேவையில் இருக்கும் அலுவலர்களுக்கு, ஊனமுற்ற குழந்தைகள் இருந்தால், அந்த அலுவலர்கள் பணியாற்றும் நிறுவனத்தால், அவர் மருத்துவக் சபைக்கு அனுப்பப்பட வேண்டும். தாய், தந்தை இருவருமே பொதுச் சேவையில் பணிபுரியும் பட்சத்தில், ஒரே ஒரு விண்ணபத்தை ஒரு நிறுவனம் மருத்துவ சபையிடம் சமர்ப்பித்தால் போதுமானது அத்துடன் மருத்துவக் சபையின் அறிக்கை கிடைத்ததும், அது அலுவலரின் தனிப்பட்ட கோவையில் இணைக்கப்பட வேண்டும். மேலும் மருத்துவக் சபையின் அறிக்கையின் சான்றளிக்கப்பட்ட பிரதி வாழ்க்கைத்துணையின் தனிப்பட்ட கோவையில் இணைக்கும் பொருட்டு அவரது அலுவலகத்திற்கும் அனுப்பப்பட வேண்டும்.

ii. அனாதையின் தந்தை மற்றும் தாய் இருவரும் பொது சேவையில் ஓய்வூதியம் பெறுபவர்களாகவும் விதவைகள் / தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய திட்டத்தில் உறுப்பினராகவும் இருந்தால், ஒருவரின் ஓய்வூதிய கோவை மூலம் மருத்துவ சபையில் விண்ணபத்தை சமர்ப்பித்தால் போதுமானது. மேலும் பிரதேச செயலாளரினால் சான்றளிக்கப்பட்ட விண்ணபத்தின் பிரதியும் வைத்திய சபையின் அறிக்கையின் பிரதியும் வாழ்க்கைத் துணையின் தனிப்பட்ட கோவையில் இணைக்கப்பட வேண்டும்.

iii. தந்தையும் தாயும் வெவ்வேறு பிரதேச செயலகங்களில் இருந்து ஓய்வூதியத்தைப் பெறும்போது அல்லது ஒருவர் வெளிநாட்டு ஓய்வூதிய வகைக்குரிய பிரிவின் கீழ் ஓய்வூதியத்தை பெறும்போது கோரிக்கையை முன்வைக்கும் பிரதேச செயலகத்தால் அல்லது வெளிநாட்டு ஓய்வூதியப் பிரிவினால் குழந்தை மருத்துவ சபைக்கு முன்னிறுத்தப்பட வேண்டும். வாழ்க்கைத் துணைக்கு ஓய்வூதியம் வழங்கப்படும் பிரதேச செயலகத்திற்கோ அல்லது வெளிநாட்டு ஓய்வூதியப் பிரிவிற்கோ அதைத் தெரிவிக்க வேண்டும். மருத்துவக் குழுவின் அறிக்கை வழங்கப்பட்டதும், அதன் சான்றளிக்கப்பட்ட நகலை ஓய்வூதியக் கோவையுடன் இணைக்கும் பொருட்டு, வாழ்க்கைத் துணை ஓய்வூதியம் பெறும் நிறுவனத்திற்கு அனுப்பப்பட வேண்டும். இரண்டு கோவைகளும் கொடுப்பனவுகளை செலுத்துவதற்காக ஓய்வூதியத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

iv. வெளிநாட்டில் தங்கி ஓய்வூதியம் பெறும் ஒருவருக்கு ஊனமுற்றோருக்கான அனாதை ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டிய குழந்தைகள் இருந்தால், ஓய்வூதியத் திணைக்களத்தின் வெளிநாட்டு ஓய்வூதியப் பிரிவு அவர்களை மருத்துவக் குழுவிடம் முன்னிறுத்த வேண்டும், மேலும் அத்தகைய குழந்தை இலங்கையில் வாழ்ந்தால் மட்டுமே மருத்துவ சபைக்கு முன்னிறுத்த வேண்டும். (15.08.2011 தகதிய 1719/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின்

ஏற்பாடுகளின்படி, ஊனமுற்றோர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியம் பெறுபவர் வெளிநாட்டில் தங்கியிருந்தால் அவருக்கு ஓய்வூதியம் வழங்க முடியாது.)

(ஆ) மேற்கூறிய (அ) இன் படி, ஊனமுற்ற குழந்தை மருத்துவ சபைக்கு அனுப்பப்படாவிட்டால், அவர் சம்பந்தப்பட்ட பிரதேச செயலகத்தால் / வெளிநாட்டு ஓய்வூதியப் பிரிவினால் கட்டாயமாக மருத்துவ சபையின் கோரிக்கைக்கு பதிலளிக்கும் வகையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மருத்துவ சபையால் மருத்துவ அறிக்கை வழங்கப்பட்டதும், ஓய்வூதியம் தொடர்பான விடயத்தை பரிசீலிக்க ஓய்வூதியத் திணைக்களத்திற்கு கோவை அனுப்பப்பட வேண்டும்.

(இ) மருத்துவக் சபைக்குச் முன்னிறுத்தும் போது, கீழே குறிப்பிடப்பட்டுள்ள செயல்முறைகளை பின்பற்ற வேண்டும்.

i. அத்தகைய நபர் மருத்துவ சபைக்கு அனுப்பப்படும் போது, சுற்றறிக்கையின் 01 ஆம் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள புதிய விண்ணப்பத்தின் மாதிரியே, கண்டிப்பாக பயன்படுத்தப்பட வேண்டும். விண்ணப்பம் ஆறு (06) பக்கங்களைக் கொண்டுள்ளது மேலும் அதன் அனைத்துப் பக்கங்களையும் முழுமையாகச் சமர்ப்பிக்க வேண்டும்.

ii. விண்ணப்பதாரியின் அடிப்படை விவரங்கள் பக்கம் 03 இல் உள்ளடக்கப்பட வேண்டும்.

iii. சமீபத்தில் (அதிகபட்சம் ஒரு வருட காலத்திற்குள்) பெறப்பட்ட 307 ஆம் இலக்க சுகாதாரப் படிவத்தில் உள்ள மருத்துவ அறிக்கை (இயலாமையின் தற்போதைய நிலை குறித்து மருத்துவ அலுவலரின் பரிந்துரை) விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

iv. அடையாளத்தை உறுதி செய்வதற்காக, ஊனமுற்ற குழந்தையின் தேசிய அடையாள அட்டையின் இலக்கத்தை விண்ணப்பத்தில் உள்ளடக்க வேண்டும் மேலும், 16 வயது நிறைவடைந்த நிலையில் தேசிய அடையாள அட்டை பெறப்படவில்லை எனின் தேசிய அடையாள அட்டையை பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

v. மருத்துவ சபைக்கு அனுப்புவதற்கு முன், விண்ணப்பதாரி விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்தில் பங்களிப்பவரின் முறையான குழந்தையா என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

vi. பங்களிப்பாளர் பல ஊனமுற்ற குழந்தைகளைக் கொண்டிருந்தால், அத்தகைய குழந்தைகள் அனைவரும் மருத்துவ சபைக்கு முன்னிறுத்தப்பட வேண்டும்.

(ஈ) ஊனமுற்றோர் ஓய்வூதியம் வழங்குவதை பரிசீலிப்பதற்காக கோவை திணைக்களத்திற்கு அனுப்பப்படும் போது கருத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்.

i. சமர்ப்பிக்கப்பட்ட விவரங்கள் பூர்த்தி செய்யப்படாத/ ஊனத்தின் நிலையை தெளிவாகக் குறிப்பிடப்படாத / ஊனம் ஏற்பட்ட காலம் தெளிவாக குறிப்பிடப்படாத மற்றும் ஊனம் தொடர்பான தகவல்களில் முரண்படும் (இயலாமை நிரந்தரமானதாகவோ அல்லது தற்காலிகமாகவோ), சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் அங்கீகரிக்கப்படாத சந்தர்ப்பங்களில் மருத்துவ சபைகளின் அறிக்கைகள் சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு மீண்டும் சமர்ப்பிக்கப்பட வேண்டும், பின்னர் அத்தகைய அறிக்கைகள் பூரணப்படுத்தப்பட்டபின் அல்லது தெளிவுபடுத்தப்பட்ட பின்னர் தொடர்புடைய கோவையில் இணைக்கப்பட வேண்டும்.

ii. மருத்துவப் பரிசோதனை செய்து ஓராண்டு நிறைவடைந்த விண்ணப்பதாரிகளுக்கு ஓய்வூதியம் வழங்குவது குறித்து பரிசீலிக்க கோவை அனுப்பப்படும் போது, அந்த நபர் இன்னும் ஊனத்தால் பாதிக்கப்பட்டுள்ளார் என்பதை சம்பந்தப்பட்ட பகுதியின் சுகாதார மருத்துவ அலுவலர்களிடம் இருந்து உறுதிப்படுத்த வேண்டும்.

iii. ஊனமுற்ற ஓய்வூதிய விண்ணப்பதாரிகளை மருத்துவ சபைக்கு முன்னிறுத்தாது அனுப்பப்படும் கோவைகள் பிரதேச செயலகத்திற்கு திருப்பி அனுப்பப்படும்.

iv. மேற்கூறியவற்றுக்கு மேலதிகமாக, ஊனமுற்றோர் ஓய்வூதியம் பெறுவதற்கு ஓய்வூதியத் திணைக்களத்திற்கு குறைபாடுகள் உள்ள கோவைகளை சமர்ப்பிப்பதால் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்க, கோவைகளுடன் பின்வரும் விவரங்களை சரியாகச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1. பிரதேச செயலாளரின் சிபாரிசு அடங்கிய ஆரம்ப விசாரணை அறிக்கையுடன் பிடி 4 விண்ணப்பம்
2. பங்களிப்பாளரின் திருமணச் சான்றிதழ், ஊனமுற்றவரின் பிறப்புச் சான்றிதழ், பங்களிப்பாளர் மற்றும் விதவையின் இறப்புச் சான்றிதழ் ஆகியவற்றில் உள்ள பெயர்களில் மாற்றங்கள் காணப்பட்டால், இது தொடர்பாக சத்தியக் கடிதம் ஒன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும் மேலும் அம் மாற்றங்கள் கணிசமான அளவில் இருக்கும் பட்சத்தில் பிரதேச செயலாளரின் பரிந்துரையுடன் கூடிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
3. ஊனமுற்ற குழந்தைகளுக்கு ஒரு அறங்காவலர் நியமிக்கப்பட வேண்டும் என்றால், 07/2020 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கையின்படி பிரதேச செயலாளரினால் கையொப்பமிடப்பட்ட ஊனமுற்றோர் ஓய்வூதியத்திற்கான அறங்காவலர் உடன்படிக்கையுடன் பொருத்தமான அறங்காவலர் தொடர்பான பிரதேச செயலாளரின் சிபாரிசும் வழங்கப்பட வேண்டும்.
4. ஊனமுற்ற நபர் மற்றும் அறங்காவலர் இருவரும் ஒரே பிரதேச செயலாளர் பிரிவில் வசிப்பவர்களாக இருக்க வேண்டும். எவ்வாறாயினும், ஊனமுற்றவரின் பிரதேச செயலாளர் பிரிவுக்குள் பொருத்தமான அறங்காவலரைக் காண முடியாத நிலையில், பிரதேச செயலாளர் மற்றொரு பிரிவிலிருந்து ஒரு அறங்காவலரைப் பரிந்துரைக்க முடியும். அவ்வாறான சந்தர்ப்பங்களில், அறங்காவலர் வசிக்கும் பிரதேச செயலகத்தினால் ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், ஊனமுற்றவர்களின் தேவைகளுக்காக அறங்காவலர் ஓய்வூதியத்தைப் பயன்படுத்துகிறார் என்பதற்கான அறிக்கை மூன்று மாதங்களுக்கு ஒருமுறை பெறப்பட்டு ஓய்வூதிய கோவையில் இணைக்கப்படவேண்டும்.
5. அதிகப்படியான தொகை செலுத்தப்பட்டிருந்தால், அத்தகைய தொகைகள் மிகைக்க கொடுப்பனவாக செலுத்தப்பட்டதா என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.
6. மேற்கூறப்பட்ட விவரங்களுக்கு மேலதிகமாக, 01/2009 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கையின் படி சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பம் மற்றும் பிற தொடர்புடைய அனைத்து ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(உ) ஊனமுற்றோர் ஓய்வூதியம் வழங்குவது தொடர்பான 1719/3 ஆம் இலக்க 2011.08.15 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் 9 ஆம் பிரிவின் படி, பிறக்கும் போது ஊனமில்லாது பிறப்பவர்கள் ஐந்து ஆண்டுகளுக்கு (05) ஒரு முறையும் மருத்துவ குழுவிடம் முன்னிறுத்தப்பட வேண்டும். இதன்படி, பிறப்பால் ஊனமில்லாது பிறப்பவர்களுக்கு வழங்கப்படும் மருத்துவச் சபையின் அறிக்கைகளை ஆராய்ந்து, ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை அவ்வாறானவர்களை மருத்துவ சபைக்கு அனுப்புவதற்கு பிரதேச செயலாளர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த நோக்கத்திற்காக, சுற்றறிக்கையின் இணைப்புகளில் சுட்டிக்காட்டப்பட்ட புதிய விண்ணப்பம் பயன்படுத்தப்பட வேண்டும். ஒருவர் மீண்டும் மருத்துவக் சபைக்கு அனுப்பப்பட்டால், ஓய்வூதியம் வழங்குவதில் இடையூறு எற்பாடு தொடரப்பட வேண்டும் மற்றும் ஊனமுற்றோர் ஓய்வூதியம் பெறுபவருக்கு நிர்ணயிக்கப்பட்ட நாளில் அவர் மருத்துவ சபையின் முன் கட்டாயம் ஆஜராக வேண்டும் என்று தெரிவிக்க வேண்டும். மருத்துவக் சபையின் அறிக்கை வழங்கப்பட்டவுடன், ஊனமுற்றவரின் ஊனம் மேலும் உறுதிசெய்யப்பட்டவர்களுக்கு ஓய்வூதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும், மேலும் அந்த நபர் பாதிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டால், ஊனமுற்றோர் ஓய்வூதியம் வழங்குவதை நிறுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஊ) மேலும், ஓய்வூதியர் அல்லது வாழ்க்கைத்துணை அதாவது ஓய்வூதியர், விதவை அல்லது தபுதாரர் வாழும் போது, ஊனமுற்ற நபரை மருத்துவ சபைக்கு அனுப்பி வழங்கப்படும் மருத்துவ சபையின் அறிக்கை மூலம் அவர்களின் ஊனம் உறுதிப்படுத்தப்பட்டதும் ஊனமுற்ற அனாதைகளுக்கு, கடைசியாக ஓய்வூதியம் பெறுபவர் இறந்த திகதிக்கு அடுத்த நாள் முதல் ஓய்வூதியக் கொடுப்பனவு தொடங்கப்படும். இதற்கிடையில், ஓய்வூதியர் மற்றும் விதவைகள் இறந்த பிறகு மருத்துவ சபைக்கு அனுப்பப்பட்ட ஊனமுற்ற அனாதைகளுக்கு, மருத்துவ சபையின் ஒப்புதல் வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஓய்வூதியம் வழங்குவது ஆரம்பிக்கப்படும்.